கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 20.09.2021

# 20.09.2021ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

**01)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணிகள் மேற்கொள்ள தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அனுப்பும் பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் K.Dis/17964/J3/2019 நாள் 10.02.2020 நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரி நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு 01.07.2020 முதல் ஓராண்டு காலத்திற்கு எஸ்.எஸ்.இன்சினியர்ஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணியில் திருப்திகரம் இல்லாத காரணத்தால் காலநீட்டிப்பு செய்ய இயலாது என தெரிவிக்கும் பொருட்டு பணி உத்திரவினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி எண்:1079 நாள்:30.06.2021 பெறப்பட்டதோடு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை நகரின் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் பேணிகாக்கும் பொருட்டு 01.07.2021 முதல் சுய உதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. செப்டம்பர் 2021 மாதத்திற்கு சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், செப்டம்பர் 2021 மாதமும் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2020–2021ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி நிர்ணயம் ந.க.11845 /2020/ஜி2 நாள்:11.11.2020 | நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | உத்தேச செலவினம் ஒரு மாதததிற்கு (நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| | ரூ 411 /– | ரூ.12,330 /– |

ஆகஸ்ட் 2021–மாதத்திற்கு 400 பணியாளர்கள் பணிபுரிந்து வந்த நிலையில் செப்டம்பர் 2021 முதல் உரக்கிடங்களில் குப்பை தரம் பிரிக்க கூடுதல் பணியாளர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் செப்டம்பர் 2021 மாதத்திற்கு தோராயமாக 415 பணியாளர்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**49,75,000 /–**க்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

(அ) புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை செப்டம்பர் 2021 மாதத்திற்கு சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.6256 / 2019 / எச்1**

---

**02)** இந்நகராட்சியில் பணிகள் செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கும், விநியோகஸ்தர்களும் வழுங்கப்படும் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவைவரி தொகையினை வரியில்லா இனங்களில் பிடித்தம் செய்யப்படும் சேவைவரி தொகையினையும் “E”-Filling TDS திரு.நாகராஜன் பட்டயக்கணக்கர் மூலம் செய்வதற்கும், 2021–2022ஆம் ஆண்டிற்கான முதல் காலாண்டிற்கு தொகை வழங்க உத்தேச செலவினமாக ரூ.15,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அனுமதி வழங்கலாம்.

**ந.க. எண்.11075 / 2019 / பி2**

---

**03)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணிகள் மேற்கொள்ள தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அனுப்பும் பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் K.Dis/17964/J3/2019 நாள் 10.02.2020 நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரி நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு 01.07.2020 முதல் ஓராண்டு காலத்திற்கு எஸ்.எஸ்.இன்சினியர்ஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணியில் திருப்திகரம் இல்லாத காரணத்தால் காலநீட்டிப்பு செய்ய இயலாது என தெரிவிக்கும் பொருட்டு பணி உத்திரவினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி எண்:1079 நாள்:30.06.2021 பெறப்பட்டதோடு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை நகரின் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் பேணிகாக்கும் பொருட்டு 01.07.2021

முதல் சுய உதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. அக்டோபர் 2021 மாதத்திற்கு சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், அக்டோபர் 2021 மாதமும் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2020–2021ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி நிர்ணயம் ந.க.11845 /2020/ஜி2 நாள்:11.11.2020 | நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | உத்தேச செலவினம் ஒரு மாததிற்கு (நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| | ரூ 411 /– | ரூ.12,330 /– |

அக்டோபர் 2021 மாதத்திற்கு தோராயமாக 415 பணியாளர்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**49,75,000** /–க்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

(அ) புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை அக்டோபர் 2021 மாதத்திற்கு சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.6256 / 2019 / எச்1**

---

**04)** இந்நகராட்சிக்கு சொந்தமான மகாமககுளம் மேலக்கரையில் அமைந்துள்ள உணவு விடுதியின் அடங்கிய பராமரிப்பு பொறுப்பு ஏற்று வருவாயை நகராட்சியுடன் பகிர்ந்து கொள்ள 1.6.2019 முதல் 31.5.2022 வரை ஏற்று வருவாயில் 40 சதவீத பங்கு தொகையை நகராட்சிக்கு செலுத்தவும் சிற்றுண்டி விடுதி நடத்திக் கொள்ளவும் திரு.வை.கிருஷ்ணசாமி, 530 காரைக்கால் ரோடு, கும்பகோணம் என்பவருக்கு உரிமம் வழங்கி உத்தரவு வழங்கப்பட்டது. அன்னாருக்கு 31.5.2022 முடிய ஒப்பந்த காலம் இருந்தும், உரிமைதாரர் தனது 23.8.2021 (அலுவலகத்தில் கிடைக்கப்பெற்றது 31.8.2021) தேதிய கடிதத்தில் நாள் 1.9.2021 நாள் முதல் விலகி கொள்வதாக கடிதம் கொடுத்துள்ளார். அதனை தொடர்ந்து வை. கிருஷ்ணசாமி என்பவருக்கு வழங்கப்பட்ட ஏல உரிம ஆணையை ரத்து செய்யவும், நகராட்சியின் வருவாய் பெருக்கும் வகையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. மேற்படி ஒப்பந்தபுள்ளியினை நாளிதழில் பிரசுரம் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 25,000/– பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்

2.நாளிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4026/2017/அ7

---

**05)** நகர் நிர்வாக மானிய கோரிக்கை எண்.34–ல் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களால் கும்பகோணம் நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்த அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்தும் பட்டியல்கள், வரைபடங்கள் மற்றும் விபரங்கள் கோரப்பட்டுள்ளன. நகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள அனைத்து பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் புல எண்ணுடன் கூடிய வரைபடம் , சுற்று சார்பு வரைபடம், மாநகராட்சி உத்தேச வரைபடம் Auto cad –ல் தயார் செய்தல் மற்றும் கோரப்பட்டுள்ள விபரங்களை தயார் செய்திட உத்தேச செலவினம் ரூ.200000/– மன்ற ஒப்புதல் பெறலாம் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு** -

1. அனுமதி அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ள மன்[illegible] ம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.6348/2021/டி1

---

**06)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணிகள் மேற்கொள்ள தனியார் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அனுப்பும் பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் K.Dis/17964/J3/2019 நாள் **10.02.2020** நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தபுள்ளி கோரி நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு **01.07.2020** முதல் ஒராண்டு காலத்திற்கு எஸ்.எஸ்.இன்சினியர்ஸ், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள உத்திரவிடப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் பணியில் திருப்திகரம் இல்லாத காரணத்தால் காலநீட்டிப்பு செய்ய இயலாது என தெரிவிக்கும் பொருட்டு பணி உத்திரவினை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி எண்:1079 நாள்:30.06.2021 பெறப்பட்டதோடு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை நகரின் பொது சுகாதாரப் பணிகள் பாதிக்காமல் பேணிகாக்கும் பொருட்டு **01.07.2021** முதல் சுய உதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

செப்டம்பர் **2021** மாதத்திற்கு சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், செப்டம்பர் **2021** மாதமும் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2020–2021ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி நிர்ணயம் ந.க.11845 /2020/ஜி2 நாள்:11.11.2020 | நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | உத்தேச செலவினம் ஒரு மாததத்திற்கு (நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| | ரூ 411 /– | ரூ.12,330 /– |

செப்டம்பர் **2021**–மாதத்திற்கு **400** பணியாளர்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**49,32,000** /–க்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

(அ) புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை செப்டம்பர் **2021** மாதத்திற்கு சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.6256 / 2019 / எச்1**

---

**07)** கும்பகோணம் நகராட்சி பகுதியில் டெங்குகாய்ச்சலை பரப்பும் கொசுக்கள் உற்பத்தியாகும் நிலைகளை கண்டறிந்து கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ள பொதுசுகாதாரத்துறை வழிகாட்டுதலின் படி களப்பணியாளர்கள் 120 பேர் பணி மேற்கொள்ளநகர் மன்றதீர்மான எண்.449 நாள்:30.08.2019ல் அனுமதிபெறப்பட்டு JRK டிரேடர்ஸ் , கும்பகோணம் நிறுவனத்தார்க்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தநிலையில் கால நீட்டிப்பு செய்த பணி உத்திரவு காலம் **30.06.2021**–ஆம் தேதியுடன் நிறைவடைந்ததால், இந்நககர்மன்றத்தின் அனுமதி எண்:1080 நாள்:30.06.2021ல் மேற்படி பணிகள் பாதிக்காமல் பேணிகாக்கும் பொருட்டு **01.07.2021** முதல் சுய உதவிக்குழு மூலம் பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது.

01.07.2021 முதல் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்கண்டவாறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2020–2021ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி நிர்ணயம் ந.க.11845 /2020/ஜி2 நாள்:11.11.2020 | நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு | உத்தேச செலவினம் ஒரு மாததத்திற்கு (நபர் ஒன்றுக்கு) |
|---|---|---|
| | ரூ 411 /– | ரூ.12,330 /– |

புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் காலம் வரை **01.07.2021** முதல் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ள செப்டம்பர் **2021** மற்றும் அக்டோபர் **2021** மாதத்திற்கு தோராயமாக **120** பணியாளர்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.**30,00,000** /–க்கு மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பணியின் அவசரஅவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று அக்டோபர் 2021 பணி மேற்கொண்டதையும், அதற்குரிய செலவினம் வருவாய்நிதியில் மேற்கொள்ளஅனுமதிஅளிக்கலாம்.

**ந.க.எண்.6256 / 2019 / எச்1**

---

**08)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு பராமரிப்பு வாகனம் TN68 Z3849 TATA – ACE வாகனத்தின் டயர், டியூப் பழுதடைந்துள்ளதனை மாற்றம் செய்யும் பொருட்டு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று முன்பக்கம் –2 டயர் டியூப், பின்பக்கம் –2–டயர் டியூப் வாங்க விலைப்புள்ளி பெறப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | K.B.R. டயர்ஸ்,<br>12, ஜி, நீடாமங்கலம் ரோடு<br>கும்பகோணம். | 14800 |
| 2. | ஹரி டயர்ஸ்<br>15, தலைமை அஞ்சலக சாலை<br>கும்பகோணம். | 16000 |
| 3. | ஸ்ரீ பாலாஜி டயர்ஸ்<br>12, காரைக்கால் ரோடு<br>கும்பகோணம். | 17000 |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(அ) குறைந்த விலை விகித விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் K.B.R. டயர்ஸ், கும்பகோணம். நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.

(ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்கலாம்.

(இ) இதற்குண்டான செலவினம் ரூ.14,800/– (ரூபாய் பதினான்காயிரத்து எண்ணூறு மட்டும்) வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.5544/2021/எச்1**

---

**09)** இந்நகராட்சி பேருந்து நிலையம் எதிரில் உள்ள பழைய இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம், பழைய பேருந்து நிலையம் எதிரில் உள்ள தற்போதைய காலியிடம் மற்றும் காரனேஷன் மருத்துவமனை எதிரில் உள்ள காலியிடம் ஆகிய மூன்று இடங்களில் புதியதாக அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் மற்றும் யாத்ரி நிவாஸ் (யாத்ரிகர்கள் தங்கும் விடுதி) கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டதன் பேரில் மேற்கண்ட இடங்களுக்கு மண் பரிசோதனை செய்து தரைத் தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் வரை அமைப்பதற்கான கம்பி வடிவமைப்பு ஆகியவற்றினை அண்ணா பல்கலைக் கழகம், ராஜமடம் மூலம் பெறவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 8725 /2021/இ2**

---

**10)** இந்நகராட்சி பிளாக் எண்.28, வார்டு எண்.7, நகர நல அளவை எண்.1238, 1245, 1243– பெருமாண்டி சுடுகாட்டில் செயல்பட்டு வரும் நவீன எரிவாயு தகன மேடையை பராமரிக்க தகுதியும், அனுபவமும் வாய்ந்த தொண்டு நிறுவனங்கள்/அறக்கட்டளைகளிடமிருந்து **9.9.2021** அன்று தன் விருப்பங்கோரும் அறிவிப்பு ந.க.எண்.**4529/2021**/இ2 நாள் **19.8.2021**–ஐ தஞ்சாவூர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் வெளியீட்டு ஆணை எண்.**175**/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம்/**2017** நாள் **21.8.2021**–ன் முலமாக மக்கள் குரல் நாளிதழில் **22.8.2021** அன்று விளம்பரம் செய்தமைக்கு செலவினம் ரூ.**6048**/– மற்றும் மேற்கண்ட விளம்பரத்தினை அட்வேவ் அட்வர்டைசிங் பிரைவேட் நிறுவனத்தினரால் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் **22.8.2021** அன்று செய்தமைக்கு செலவினம் ரூ.**40950**/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்**4529/2021/இ2

---

**11)** எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி இந்நகராட்சி வார்டு எண்.**1** முதல் **15** முடிய உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்ட ஆளிறங்கு கிணறுகளில் படிந்துள்ள மணல் மற்றும் கசடுகளை அகற்ற கூடுதல் திறன் உள்ள Truck mounted Super sucking and Jetting Machine with recycling facility கொண்ட வாகனங்களை வாடகை அடிப்படையில் அமர்த்தி செயல்படுத்தும் பணிக்கு ரூ. **4.50** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கொண்ட செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 8226/2021/இ2**

---

**12)** எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி இந்நகராட்சி வார்டு எண்.**16** முதல் **30** முடிய உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்ட ஆளிறங்கு கிணறுகளில் படிந்துள்ள மணல் மற்றும் கசடுகளை அகற்ற கூடுதல் திறன் உள்ள Truck mounted Super sucking and Jetting Machine with recycling facility கொண்ட வாகனங்களை வாடகை அடிப்படையில் அமர்த்தி செயல்படுத்தும் பணிக்கு ரூ. **4.50** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கொண்ட செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 8226 /2021/இ2**

---

**13)** எதிர் வரும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்த்திட ஏதுவாக வரும் **20.9.2021** முதல் **25.9.2021** வரை "மாபெரும் மழைநீர் வடிகால் தூய்மைப் பணி முகாம்" ஆக நகரில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களையும் **100** சதவீதம் தூர்வாரி தூய்மைப்படுத்திட மெகா கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் தூய்மைப்படுத்தும் திட்டத்தினை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட உள்ளது. இந்நகராட்சி

வார்டு எண் 35 முதல் 45 வரை உள்ள பகுதிகளில் செல்லும் நகராட்சி பராமரிப்பில் உள்ள தேப்பெருமாநல்லூர் வாய்க்கால், உள்ளூர் வாய்க்கால், பழவத்தான் கட்டளை வாய்க்கால், பெருமாண்டி வாய்க்கால் ஆகிய பாசன வாய்க்கால்கள் மற்றும் ஓலைப்பட்டிணம் வாய்க்கால் மற்றும் மோரி வாய்க்கால் ஆகிய கழிவு நீர் வாய்க்கால்களில் படிந்துள்ள கசடுகளை செயின் டோசர் , ஜேசிபி இயந்திரம் , டிராக்டர் டிப்பர் ஆகியவற்றை வாடகை அடிப்படையில் அமர்த்தி செயல்படுத்தும் பணிக்கு ரூ. 4.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கொண்ட செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 8226 /2021/இ2**

**ம.எண் 2321–22**

---

**14)** எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கி இந்நகராட்சி வார்டு எண் 31 முதல் 45 முடிய உள்ள பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்ட ஆளிறங்கு கிணறுகளில் படிந்துள்ள மணல் மற்றும் கசடுகளை அகற்ற கூடுதல் திறன் உள்ள Truck mounted Super Sucking and Jetting Machine with recycling facility கொண்ட வாகனங்களை வாடகை அடிப்படையில் அமர்த்தி செயல்படுத்தும் பணிக்கு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்கு,

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கொண்ட செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதியளிக்கலாம்

**ந.க.எண். 8226/2021/E2**

---

**15)** எதிர் வரும் வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் இடர்பாடுகளை தவிர்த்திட ஏதுவாக வரும் 20.9.2021 முதல் 25.9.2021 வரை "மாபெரும் மழைநீர் வடிகால் தூய்மைப் பணி முகாம்" ஆக அறிவித்து நகரில் உள் அனைத்து மழைநீர் வடிகால்களையும் 100 சதவீதம் தூர்வாரி தூய்மைப்படுத்திட மெகா கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் தூய்மைப்படுத்தும் திட்டத்தினை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்தப்பட உள்ளது. இந்நகராட்சி எல்லைக்குள் செல்லும் நகராட்சி பராமரிப்பில் உள்ள தேப்பெருமாநல்லூர் வாய்க்கால், உள்ளூர் வாய்க்கால், பழவத்தான் கட்டளை வாய்க்கால், பெருமாண்டி வாய்க்கால் ஆகிய பாசன வாய்க்கால்கள் மற்றும் ஓலைப்பட்டிணம் வாய்க்கால் மற்றும் மோரி வாய்க்கால் ஆகிய கழிவு நீர் வாய்க்கால்களில் படிந்துள்ள கசடுகளை செயின் டோசர் , ஜேசிபி இயந்திரம் , டிராக்டர் டிப்பர் ஆகியவற்றை வாடகை அடிப்படையில் அமர்த்தி செயல்படுத்தும் பணிக்கு ரூ. 5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கொண்ட செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 8226 /2021/இ2**

**ம.எண்24./21–22**

---

**16)** இந்நகராட்சி வார்டு எண்.26, புதிய பேருந்து நிலைய வளாகத்தில் பழுதுபட்டுள்ள இலவச கழிவறையினை புதுப்பிக்கும் பணிக்கு ரூ. 20.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கொண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 9608 /2021/இ2**

---

**17)** இந்நகராட்சி எல்லைக்குட்ட பகுதிகளில் செல்லக்கூடிய ஓலைப்பட்டிணம் வாய்க்கால், பழவத்தான்கட்டளை வாய்க்கால், உள்ளூர் வாய்க்கால், மோரிவாய்க்கால், மற்றும் தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் ஆகிய வாய்க்கால்களை 1 முதல் 45 வார்டுகளில் எதிர்வரும் பருவமழையினை கருத்தில் கொண்டு மழைநீர் வடியக்கூடிய இடங்கள் , அதிகமாக மண் சேர்ந்து வடிகால் நீர் ஓட முடியாமல் தேங்கி நிற்கும் இடங்களை நகராட்சி துப்புரவு ஆய்வர்களின் மேற்பார்வையில் தூர்வாரவும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சிறப்பு பணியாக செய்ய அறிவுறுத்தியதால் அதற்கு உள்ளூரில் விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ளும் பணிக்கு ரூ. 5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கொண்ட செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 9608 /2021/இ2**

---

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**